| காலாண்டுத் தேர்வு - 2024 | | தேர்வு எண் |
|---|---|---|
| காலம் : 3.00 மணி | XI - தமிழ் | மதிப்பெண் : 90 |

## பகுதி - 1

*குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.* **(14x1=14)**
*2) ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.*

1. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
_________ இல்லது பனுவல் அன்றே
அ) பனுவல் ஆ) பாயிரம்
இ) பாடல் ஈ) காவியம்

2. கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல்கனிமங்கள் - *அடிமோனையைத் தெரிவு செய்க*
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட
ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால்
ஈ) காலத்தால் - சாகாத

3. முல்லைத் திணை பாடுவதில் வல்லவர் _________?
அ) கபிலர்
ஆ) ஓரம்போகியார்
இ) பேய்னார்
ஈ) அம்மூவனார்

4. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் _________?
அ) மார்ச் 20 ஆ) ஏப்ரல் 20
இ) மே 20 ஈ) ஜூன் 20

5. மண்ணுக்கு வளம் சேர்ப்பன _________
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

6. கூற்று: "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்
விளக்கம்: "கோடு" என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு
அ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு
இ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

7. துன்பப்படுபவர் _________?
அ) தீக்காயம்பட்டவர்
ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர்
ஈ) நாவைக் காக்காதவர்

8. தொல்காப்பியத்திலுள்ள இயல்களின் எண்ணிக்கை?
அ) 9 ஆ) 3
இ) 27 ஈ) 13

9. சிந்தடி பெற்று வரும் சீரின் அளவு _________?
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. ***பொருந்தாததைக் கண்டறிக.***

அ) வாடிவாசல் - சி.சு.செல்லப்பா
ஆ) ஆறாம் திணை - அ.முத்துலிங்கம்
இ) பிம்பம் - பாரதியார்
ஈ) யானை டாக்டர் - ஜெயமோகன்

11. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ________ என்பதாகும்

அ) நூல் ஆ) ஓலை
இ) எழுத்தாணி ஈ) தாள்

12. விதைத்தவர் - என்பதன் இலக்கணக்குறிப்பு?

அ) உரிச்சொல் ஆ) வினையாலணையும் பெயர்
இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்

13. Password என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்?

அ) கடவுச்சீட்டு ஆ) அனுமதிச்சீட்டு
இ) நுழைவு இசைவு ஈ) கடவுச்சொல்

14. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது?

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை
இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

## பகுதி -2 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
16. காவடிச்சிந்து என்பது யாது?
17. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
18. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

## பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
21. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

## பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.*** ***(7x2=14)***

22. ***ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.***

அ) தண்டுடை
ஆ) மண்ணுயிர்

23. ***ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அ) துஞ்சல்
ஆ) மெலிந்து

24. ***தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.***

ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்

25. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.***

கால்நடை ***(அல்லது)***
வைகை



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

26. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.*
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

27. *மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.*
கலை, களை, கழை

28. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எத்தனை அவை யாவை?

29. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

30. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

## பகுதி - 3

### பிரிவு - 1

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.* *(2x4=8)*

31. சு.வில்வரத்தினம். 'பாடத்தான் வேண்டும்' என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32. தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

### பிரிவு - 2

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.* *(2x4=8)*

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

36. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீவிர் அறிந்த செய்திகளை விளக்குக.

38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

### பிரிவு - 3

*குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.* *(3x4=12)*

39. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

- இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

*(அல்லது)*

சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

40. பொதுவியல் திணை

*(அல்லது)*

பொருண்மொழிக் காஞ்சித்துறை

41. ***இலக்கியநயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்கள் மட்டும் எழுதுக.***

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்;*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்.*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்.*

*-பாரதியார்.*



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42. *தமிழாக்கம் தருக.*

1) The pen is mightier than the Sword.

2) A picture is worth a thousand words.

3) Work while you work and play while you play.

4) knowledge rules the world.

43. பாடு - வேர்ச்சொல்லைக் கொண்டு வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர் ஆகியவை அமைந்த நான்கு தொடர்களை எழுதுக.

## பகுதி - 4

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.* ***(3x6=18)***

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.

*(அல்லது)*

ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றி செவிலித் தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45. அ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளின் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) "இயற்கையோடு இயந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வியல் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" - கூற்றினை மெய்பிக்கவும்.

46. அ) "யானை டாக்டர்" கதை வாயிலாக, இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுப்படுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - 5

47. *அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.* ***(4+2=6)***

அ) 'அம்ம வாழி தோழி'...... - எனத் தொடங்கும் குறுந்தொகை பாடலை எழுதுக.

ஆ) 'பட்டு' - என முடியும் குறளை எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com